**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(29.04.2026 முதல் 03.05.2026)**

**அறிக்கை எண் 08/2026** **தேதி. 24.04.2026**

### மயிலாடுதுறை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

மயிலாடுதுறை மாவட்டத்தின் 24.04.2026 முதல் 27.04.2026 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 35 - 36 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 26 - 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 68 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 0 - 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் கிழக்கு திசை வரை பதிவானது.

### எதிர்பார்க்கப்படும் வானிலை மயிலாடுதுறை (29.04.2026 முதல் 03.05.2026)

| கடந்த வார வானிலை (24.04.2026 முதல் 27.04.2026) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 03.05.2026 - 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | தேதி | நாள்-1 29/04 | நாள்-2 30/04 | நாள்-3 01/05 | நாள்-4 02/05 | நாள்-5 03/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 0 | 0 | 0 | 10 |
| 36 | 36 | 35 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 28 | 29 | 27 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 3 | 2 | 6 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 8 | 8 | 8 |
| 72 | 69 | 72 | 76 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 75 | 75 | 75 |
| 67 | 68 | 67 | 0 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 70 |
| 4 | 10 | 6 | 0 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 4 | 6 | 4 | 4 | 6 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | வடக்கு | காற்றுவீசும் திசை | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

### மயிலாடுதுறை மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 29.04.2026 முதல் 01.05.2026 ஆகிய தினங்களுக்கு லேசான தூரல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 4 - 6 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழைக்கு முன்னால் கோடை உழவு செய்து, மழை நீரை மண்ணில் சேமிக்கவும் |
| நெல் | பசுந்தாள் உரங்கள் | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும். |
| பயறுவகை பயிர்கள் | அறுவடை | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |
| தென்னை | | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிற்ப்பதற்க்கு ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் முலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும்.

**இயக்குநர்**